# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## நிதி (திருத்தம்)

**2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற் கல்வி அமைச்சர் அவர்களால்
2026 மே மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில்
வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[62 ஆம் சட்டமூலம்]

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 15.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** இவ்வாசகம் 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துகின்றதுடன் பிரிவின் சட்டப்பயனானது ஐந்து ஆண்டுகள் என்னும் காலப்பகுதிக்கு, 2026, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வணிகத் தொழிற்பாடுகள் தொடங்குகின்ற புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செல்லிடத் தொலைபேசிக் கோபுரத்துக்கான வரி விலக்களிப்பு ஒன்றை வழங்குவதற்கானதாகும்.

# நிதி (திருத்தம்)

ச.வ. - ஓ. 75/2025

## 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடிரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்      ஆம் இலக்க, நிதிச் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்கச், சட்டத்தின் 44 ஆம் பிரிவைத் திருத்துதல்

**2.** 2018 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 44 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவில், "அறவீடொன்று அறவிடப்படுதல் வேண்டும்." என்னும் சொற் களுக்குப் பதிலாக பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும்:-

"அறவீடொன்று அறவிடப்படுதல் வேண்டும்:

ஆயின், இச்சட்டம் தொடங்குகின்ற தேதியி லிருந்து தொடங்குகின்ற ஐந்து ஆண்டுகள் என்னும் காலப்பகுதிக்கு 2026, சனவரி 1ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் வணிகத் தொழிற்பாடுகளை தொடங்குகின்ற ஏதேனும் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட செல்லிடத் தொலைபேசிக் கோபுரம் தொடர்பில் அறவீடெதும் அறவிடப்படுதலாகாது.";

(2) அதன் (2) ஆம் உட்பிரிவில், "பின்வருமாறு செலுத் தப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஓராம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பின்வருமாறு செலுத்தப்படுதல் வேண்டும்:-" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

PL 15746 - 172 (2026/05)